

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (15.5.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் நான்காண்டு சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன், பொறியாளர்கள் வாரிய செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர்கள் வி.எஸ். கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.05.2025) அண்ணாநகர் மண்டலம், வார்டு–95, வில்லிவாக்கம், புதிய ஆவடி சாலை, திருநகர் பூங்காவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.90 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட உள்ள மகளிர் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையத்திற்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர் சுதா தீனதயாளன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டம்:

# திருப்பத்தூரில் புதியதாக நியமிக்கப்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார்!

சிவகங்கை. மே 16-

சிவகங்கை மாவட்ட இளைஞரணி சார்பில் திருப்பத்தூர் தனியார் மண்டபத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர ,பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி. பி .ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார் வரவேற்று பேசினார். கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ மாவட்ட கழக துணை செயலாளர் த. சேங்கைமாறன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் எழுத்தாளர் கோவி.லெனில் அன்பகம் வலைதள பயிற்சியாளர் இளமாறன் ஆகியோர் புதிதாக நியக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் , துணைஅமைப்பாளர்களுக்கு பயிற்சிகளை அளித்தார்கள். இந்த கூட்டத்திற்கு தலைமை வகித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

இளைஞர் அணியில் புதிதாக பொறுப்பேற்றுள்ளவர் கள் திட்டமிட்டு பணிகளை செய்திட வேண்டும் .திட்டமிட்ட நேரத்தில் கூட்டத்தினை நடத்திட வேண்டும். குறித்த நேரத்தில் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும். கழகத்தில் உள்ள 23 அணிகளின் முதன்மையான அணி இளைஞர் அணி ஆகும். கழக தலைவர் கலைஞர் அவர்களால் தளபதி அவர்கள் தலைமையில் துவக்கப்பட்ட இந்த இளைஞரணி முதன்மையான இடத்தை பெறுவதற்கு பல்வேறு வகையில் அவரது உழைப்பினால் உருவானது.அதற்காக கடுமையாக உழைத்து பல்வேறு வகையில் இந்த இளைஞரணியை வளர்த்து 23அணிகளில் முதன்மையான அணி என்றஇடத்தினை பெற்றுள்ளார்.

தளபதி அவர்கள் கழகத் தலைவராக பொறுப்பேற்றதும் உலகமே உற்று நோக்கும் வகையில் கழகம் செயல்பட்டு வருகின்றது.அவரது வழியில் துணை முதல்வர் இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று இயக்கத்தினை தொய்வின்றி வலிமையுடன் நடத்தி வருகிறா.ர் எனவே இளைஞர் அணி என்பது கழகத்திற்கு வலு சேர்க்கும் அணியாக அமைந்துள்ளது .இன்று பொறுப்பேற்றுள்ள ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஒற்றுமை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

கழக அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். தினசரி 10 நபர்களையாவது சந்திக்க வேண்டும். அதிக அளவில் இளைஞர் அணி உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் .அடுத்த ஆண்டு 2026 ல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது .அதில்200இடங்களில் கழகம் வெற்றி பெற வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

நாம் நாடாளுமன்ற தேர்தலின் பொழுதே சட்டமன்றத் தேர்தல் பணியினை துவங்கி விட்டோம் .நமது கூட்டணி ஒரு வலுவான கொள்கை ரீதியான கூட்டணிஆகும். கழகத் தலைவர் முதல்வர்தளபதி அமைத்துள்ள மதசார் பற்ற முற்போக்கு கூட்டணி ஆகும்.

ஆனால் இன்று புதிதாக சேர்ந்துள்ள அ.தி.மு.க. பா.ஜ.க கூட்டணி ஒற்றுமை இல்லாத கூட்டணி. நிர்பந்தத்தின் பெயரால் கூட்டணி ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் எவ்வித வலிமையும்இல்லை . ஆனால் பலம் உள்ளது போல் காண்பித்துக் கொள்கிறார்கள்.தன் மீது ஏற்படும் வழக்குகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ளவே இத்தகைய கூட்டணி அமைந்துள்ளது.

ஜெயலலிதா 2014 தேர்தலில் மோடியா லேடியா என்று மோடியை எதிர்த்தார்.ஆனால் அம்மா வழியில் இயக்கத்தை நடத்துவதாக கூறிக் கொள்பவர்கள் அம்மாவின் புகழுக்கு களங்கம் ஏற்படும் வகையில் கூட்டணியை உருவாக்கியுள்ளார்கள் .அதை மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கழக தலைவர் தளபதி அவர்கள் எத்தகைய சூழ்நிலையிலும் ,எந்த நிலையிலும், எத்தகைய அடக்குமுறை வந்தாலும் அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் என்றுதலைவர் அவர்கள் பிரகடனம் செய்துள்ளார் .அதை நாம் நிறைவேற்றிடும் வகையில் நமது பணிகள் அமைந்திட வேண்டும் .இளைஞரணி முதன்மை அணி என்பது தொடர வேண்டும் . தலைமை உங்களை அரவணைத்து ஆதரிக்க தயாராக உள்ளது .எனவே அதற்கு ஏற்ப இளைஞர்களின் செயல்பாடுகள் பணிகள் அமைந்திட வேண்டும்.1980ல், மதுரையில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாடு பேரணியில் சிவகங்கை மாவட்டம் மாநிலத்தில் இரண்டாவது இடத்தை பெற்றது.

அத்தகைய பெருமையினை சிவகங்கை மாவட்ட இளைஞரணி பெற்றுள்ளது. அதேபோல் தற்போது பொறுப்புக்கு வந்துள்ள இளைஞர் அணியினரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். தலைமையிடு ம் கட்டளைகளை பொறுப்புணர்வு டன் நிறைவேற்ற பாடுபட வேண்டும். அந்த கட்டளைகளை செயல்படுத்த வேண்டும் நம்முடைய பணிகள் எதிர்காலத்திற்கு அடித்தளமாக அமையும்.

இளைஞர்களுக்குள் நல்ல பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும் .இயக்க வரலாறுகளை இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் .கடந்த நான்காண்டு கால அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் கூற வேண்டும். இந்த இயக்கத்திற்கென்று ஒரு வரலாறுஉள்ளது. மொழி,இனம் பண்பாடு ஆகிய வற்றை பாதுகாக்கும் இயக்கமாக இந்த இயக்கம் அமைந்துள்ளது.

நமது இயக்கத்திற்கு உள்ள வரலாறு மற்ற எந்த இயக்கத்திற்கும் கிடையாது.பலவித சோதனைகளை கடந்து நமது இயக்கம் 75 ஆண்டுகள் தாண்டி உள்ளது. பவளவிழாவினை கண்டுள்ளது. எத்தனையோகட்சிகள் வரலாம். போகலாம். நமது நாட்டின் அரணாக காவலராக தளபதி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

பேரறிஞர் அண்ணாவால் துவக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்ட இயக்கம் ஆகும். இன்று மூதல்வர் தளபதி அவர்களின் தலைமையில் இந்தியாவே உற்றுநோக்கும் வகையில் அவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது அத்தகைய செயல்பாடுகள் தொடரவேண்டும் . அதற்கு அனைத்து விதமான ஒத்துழைப்பினை நாம் நல்கிடவேண்டும். அதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும்.

கழகம் இருந்தால்தான் நமது வாழ்வு சிறப்பாக அமையும் . அதற்கு ஏற்ப நமது பணிகள் அமைய மனப்பூர்வமாக அமைந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர். சேதுபதி ராஜா ,கார்த்தி , பரணி கிட்டு, கே .எம் .பொற்கோ ,எஸ் .எம் .மதிவாணர் ,மகாதீர் ,ஒன்றிய செயலாளர் கள் வே.தமிழ்மாறன், சுப்பிரமணியன், பேரூர் கழகசெயலாளர் ஆர் .கார்த்திகேயன் , ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன் , ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், அவைத் தலைவர் ராம. ரவி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் , உதயம்சண்முகம், சுப்பிரமணியன் மாவட்ட பிரதிநிதி சேவியர் ,மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சேலத்தில் தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தந்தையார் ஆசிரியர் வெங்கடாஜலம் அவர்கள் வயது மூப்பின் காரணத்தால் ஜங்ஷன் சுப்பிரமணிய நகரில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார். அன்னாரின் திருவுடலுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன், சேலம் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அண்ணாநகர் மண்டலத்தில்

# ரூ.8.40 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்!

சென்னை, மே 16-

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.8.40 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.05.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அண்ணாநகர் மண்டலம், வார்டு-95, வில்லிவாக்கம், புதிய ஆவடி சாலை, திருநகர், 20வது தெருவில் உள்ள திருநகர் பூங்காவில் ரூ.90 இலட்சம் மதிப்பில் 1,679 சதுர அடி பரப்பளவில் தரைத்தளத்தில் மகளிர் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் முதல் தளத்தில் யோகா மையக் கட்டடம், கிழக்கு மாடவீதியில் ரூ.1.50 கோடி மதிப்பில் 2,335 சதுர அடி பரப்பளவில் புதிதாக அமைக்கப்பட உள்ள போதைக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு மையம் மற்றும் வார்டு-99 கங்காதீஸ்வரர் கோவில் தெரு, சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பி. பிளாக் கட்டடத்தை முழுவதும் இடித்துவிட்டு, ரூ.6 கோடி மதிப்பில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய புதிய பள்ளிக் கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

கங்காதீஸ்வரர் கோவில் தெரு, சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் பள்ளி கட்டடம் கட்டும் பணியுடன், ஏ. மற்றும் சி பிளாக் கட்டடங்களைப்புனரமைத்தல், பள்ளியைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைத்தல், நுழைவுவாயில், கலையரங்கம், உணவுக் கூடம், பள்ளி வளாகம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், நியமனக் குழு உறுப்பினர் சொ. வேலு, மாமன்ற உறுப்பினர்கள் சுதா தீனதயாளன், பரிதி இளம்சுருதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



நா.கார்த்திக்

கோவை, மே 16 -

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

திராவிட சூரியன், திராவிட மாடல் நாயகன், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” 17.05.2025, சனிக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல், மதியம் 1.00 மணி வரை, வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் நடைபெற உள்ளது.

இம்முகாமில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

இம்முகாமில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி பி.ராஜ்குமார், கோயமுத்தூர் மாநகராட்சி மேயர் கே.ரங்கநாயகி ராமசந்திரன் உள்பட மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.


இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள்,

அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள், BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம்
### மே 16 (1993)



திருத்துறைப்பூண்டி வட்டக் கழகச் செயலாளர், தஞ்சை மாவட்ட அவைதலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

திருத்துறைப்பூண்டி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“திருச்சிக்கு அன்பில் தர்மலிங்கமும், தஞ்சைக்கு பண்பில் தர்மலிங்கமும்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**